நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## வேலூரில் ஆலங்கட்டி மழை

First Published : 21 May 2012 03:44:46 AM IST

வேலூர், மே 20: வேலூரில் பலத்த சூறாவளிக் காற்றுடன் ஞாயிற்றுக்கிழமை ஆலங்கட்டி மழை பெய்தது. அப்போது நகரின் பல்வேறு இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன.

வேலூரில் வெள்ளிக்கிழமை மாநிலத்திலேயே அதிகபட்சமாக 110.1 டிகிரியாகவும், சனிக்கிழமை 108.5 டிகிரியாகவும் வெயில் பதிவானது. இதனால் வீசிய கடும் அனல்காற்றால் மக்கள் பாதிக்கப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மேல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது குளிர்ந்த காற்றும் வீசியது. திடீரென மாலை 5.30 மணிக்கு பலத்த காற்று, இடி, மின்னலுடன் ஆலங்கட்டி மழை பெய்தது. இது மாலை 6.45 வரை நீடித்தது.

இதனால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் பல மணி நேரம் வரை மழைநீர் தேங்கிநின்றது.வேலூர் மாநகரின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த பேனர்கள் காற்றில் பறந்தன.

## உதகையில் தொடங்கியது மலர் கண்காட்சி!

First Published : 19 May 2012 03:05:53 AM IST



உதகையில் தொடங்கிய மலர் கண்காட்சியையொட்டி, அரசினர் தாவரவியல் பூங்காவில் வைக்கப்பட்டிருந்த வண்ண மலர்கள்.

உதகை, மே 18: உதகை மலர் கண்காட்சி வெள்ளிக்கிழமை தொடங்கியது. உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் 3 நாள்களுக்கு நடைபெறும் இக் கண்காட்சியை முதல் நாளில் 30,000 சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டனர்.

கண்காட்சியில் தேசிய விலங்கான புலியின் உருவமும், தமிழகத்தின் மாநில விலங்கான வரையாட்டின் உருவமும் சுமார் 25,000 காரனேசன் மலர்களால் வடிவமைக்கப்பட்டிருந்தது சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்தது. மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் உருவாக்கிய புவி வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வு மணல் சிற்பம் சுற்றுலாப் பயணிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

கண்காட்சியை துவக்கி வைத்து, வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன் பேசியது: நீலகிரி மாவட்டப் பொருளாதார நிலையை தீர்மானிக்கக் கூடிய சக்தி மலர்களுக்கு இருக்கிறது. எனவேதான், மலர் சாகுபடியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, விவசாயிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது, என்றார்.

## "தீவின்' நடுவே விவசாய நிலம்: விவசாயிகள் தவிப்பு

*சீ. சிவா*

First Published : 20 May 2012 01:34:59 AM IST



கார்மாங்குடி கிராமம் வழியே மணிமுத்தாற்றில் கலக்கும் காட்டோடை.

விருத்தாசலம், மே 18: விருத்தாசலம் அடுத்த கார்மாங்குடி கிராமத்தில் சுமார் 300 ஏக்கருக்கு அதிகமான விவசாய நிலம் தீவுபோல் உள்ள பகுதிக்கு நடுவில் உள்ளதால், விவசாயிகள் நடவு உள்ளிட்ட வேலைகளுக்கு சிரமப்படுவதோடு மட்டுமல்லாமல், விளைந்த பொருளை வீட்டுக்கு கொண்டுவருவதற்குள் பல இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

விருத்தாசலம் அருகே உள்ள கார்மாங்குடி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் நிலத்துக்கு செல்வதற்கு கார்மாங்குடி வழியாகச் சென்று மணிமுத்தாற்றில் கலக்கும் காட்டோடையை கடந்து செல்லவேண்டும்.

ஒருபக்கம் சிறிய ஓடை, பெரிய ஓடை இணைந்து காட்டோடையாக ஓடுகிறது. இன்னொரு பக்கம் அரசு காப்புக்காடு, மற்றொரு பக்கம் மணிமுத்தாறு உள்ளது. இந்நிலையில் காட்டுப் பகுதியையும், ஆற்றையும் கடந்த செல்ல பலமணி நேரம் ஆகும் என்பதால் காட்டோடை வழியாக விவசாயிகள் சென்றுவருகின்றனர். காட்டோடையை கடந்து விவசாயப் பொருள்களை விளைவிப்பதற்கும், விளைந்த பொருள்களை வீட்டுக்கு கொண்டுவருவதற்கும் விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்கும், தவிப்புக்கும் ஆளாகி வருகின்றனர்.

இதுகுறித்து கடலூர் மாவட்ட விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகி கார்மாங்குடி வெங்கடேசன் தெரிவித்தது: வெலிங்டன் ஏரியின் கடைமடைப் பகுதி மற்றும் தொழுதூர், உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலையின் கீழ்ப் பகுதியிலுள்ள 60 கிராமங்களின் வடிகால் தண்ணீர், கருவேப்பிலங்குறிச்சி, கார்மாங்குடி வழியாக செல்லும் காட்டோடை மூலம் மணிமுத்தாற்றில் கலக்கிறது. இந்நிலையில் காட்டோடையின் அகலமும், ஆழமும் ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதனால், காட்டோடைக்கு மறுபக்கம் உள்ள கார்மாங்குடி விவசாயிகளுக்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கர் நிலத்தில் நடவு உள்ளிட்ட விவசாயம் செய்வதற்கு பெரும் சிரமமாக இருந்துவருகிறது.

காட்டோடைக்கு இடையே பாலம் கட்டித்தரவேண்டும் என அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் கடந்த 20 ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து வருகிறோம். அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது கார்மாங்குடி மேல்பகுதியில் பொதுப்பணித்துறை மூலம் ரூ.16 கோடி செலவில் தடுப்பணை கட்டப்படும் என தமிழக முதல்வர் அண்மையில் அறிவித்துள்ளார். இது மகிழ்ச்சியளிக்கக்கூடிய தகவல் என்றாலும், காட்டோடையில் மழைக்காலத்தில் மட்டுமே தண்ணீர் வரும். இதன்மூலம் 4 மாதங்களுக்கு மட்டுமே தண்ணீர் தேக்க முடியும். 4 மாதத்துக்கு மட்டும் தண்ணீரை தேக்குவதற்காக ரூ.16 கோடி செலவு செய்வது விழலுக்கு இரைத்த நீராகவே இருக்கும். அதிகாரிகள் இருந்த இடத்திலேயே அமர்ந்து திட்டம் போடுகிறார்கள். இதனால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை என்பதோடு, அரசின் வரிப்பணமும் வீணாகும் என்பதுதான் உண்மை.

ரூ.16 கோடி செலவு செய்து தடுப்பணை கட்டுவதாக பொதுப்பணித் துறையினர் கூறுகின்றனர். அவர்களிடம் நாங்கள் கார்மாங்குடி பகுதியில் தடுப்பணையைக் கட்டி, அணையின் மேல், சாலை அமைத்து தந்தால் கார்மாங்குடி, வல்லியம், கீரனூர், சக்கரமங்கலம், கார்குடல், சொட்டவனம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்குச் சொந்தமான 450 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, விவசாயிகளின் நலன் கருதி தமிழக முதல்வரின் திட்டம் பயன்பெறும் வகையில் விவசாயிகளின் கோரிக்கையை கருத்தில்கொண்டு பொதுப்பணித் துறை அதிகாரிகள் தடுப்பணை மீது சாலை அமைத்துத்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## மெரட்டூர் கிராமத்தில் உழவர் பெருவிழா நிறைவு

First Published : 20 May 2012 09:21:46 AM IST

பொன்னேரி, மே 19: மீஞ்சூர் ஒன்றியத்தில் கடந்த தமிழ் புத்தாண்டு தினத்தன்று தொடங்கப்பட்ட உழவர் பெருவிழா,வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது.

சித்திரை மாதம் 1-ம் தேதி தமிழ் புத்தாண்டை ஒட்டி தமிழகம் முழுவதும் உழவர் பெருவிழா நடத்த அரசு உத்தரவிட்டிருந்த்து. அதன் பேரில் பொன்னேரி தாலுகா மீஞ்சூர் ஒன்றியத்தில் உள்ள அரசூர் கிராமத்தில் ஏப்ரல் மாதம் 13-ம் உழவர் பெருவிழா தொடங்கியது. மீஞ்சூர் ஒன்றியத்தில் உள்ள 39 ஊராட்சிகளில் 117 வருவாய் கிராமங்களில் நடத்தபட்ட உழவர் பெருவிழாவின் நிறைவு விழா மெரட்டூர் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு மெரட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் ரகுபதி தலைமை வகித்தார். பொன்னேரி கோட்டாட்சியர் கந்தசாமி, திருவள்ளூர் மாவட்ட வேளாண்மைத்துறை செயற் பொறியாளர் ஆதித்தன், மீஞ்சூர் ஒன்றிய வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் அசோகன், தோட்டக்கலைத்துறை அலுவலர் சாந்தினி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட பொன்னேரி எம்.எல்.ஏ பொன்.ராஜா விவசாயிகளுக்கு கைதெளிப்பான்கள், அனைத்து விவசாய திட்டங்கள் குறித்த கையேடு ஆகியவற்றை வழங்கினார். விழாவில் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர் திருமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் அபுபக்கர் நன்றி கூறினார்.

## அரசு மானியத்துடன் பசுந்தீவன உற்பத்தித் திட்டம்

First Published : 20 May 2012 09:22:09 AM IST

திருவள்ளூர், மே 19: அரசு மானியத்துடன் பசுந்தீவன உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என ஆட்சியர் சாட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

ஏழைகளுக்கு விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. கால்நடைகளுக்கு பசுந்தீவனம் தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 2011-12-ம் ஆண்டில் பசுந்தீவன விரைவு அபிவிருத்தித் திட்டத்துக்காக ரூ.14.3 லட்சம் ஒதுக்கப்பட்டு 100 சதவீதம் சாகுபடி செலவு மானியமாக தரப்பட்டு 200 ஏக்கரில் தீவனப்புல் பயிர் செய்யப்பட்டு 433 பேர் பயன் அடைந்தனர்.
இத்திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரத்தை நூறு சதவீதம் மானியமாக வழங்கி ரூ.4.5 லட்சம் செலவில் 18 ஏக்கர் பரப்பிலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமாக ரூ.18,750 வழங்கி 20 ஏக்கரில் ரூ.3.75 லட்சம் செலவிலும் தீவனப் புல் பயிரிடப்படுகிறது.
இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் அருகே உள்ள கால்நடை நிலையங்களை அணுகலாம் என்றார் சாட்டர்ஜி.

## பவானிசாகர் நீர்மட்டம் 50.09 அடி

First Published : 20 May 2012 02:39:29 PM IST

ஈரோடு, மே 19: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 50.09 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,026 கன அடிநீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 500 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 4.45 டி.எம்.சி.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## பசுந்தீவன உற்பத்திக்கு தமிழக அரசு மானியம்

பதிவு செய்த நாள் : மே 21,2012,01:25 IST

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டு, மாநில தீவன விரைவு அபிவிருத்தி திட்டத்திற்காக, தமிழக அர" 14.32 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது.

இத்திட்டத்தின் கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு, 25 ஆயிரம் ரூபாய், 100 சதவீதம் மானியமாக வழங்கி, 18 ஏக்கர் பரப்பளவில், 4.50 லட்சம் செலவிலும், இதர விவசாயிகளுக்கு, 75 சதவீதம்

மானியமாக, 18,750 ரூபாய் வழங்கி, 20 ஏக்கர் பரப்பில், 3.75 லட்சம் ரூபாய் செலவிலும், நீர் தெளிப்பான்கள் நிறுவும் பணி நடந்து வருகிறது. இவ்வாண்டிலும் பசுந்தீவனம் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. விவசாயிகள், கால்நடை நிலையங்களை அணுகி பயன் பெறலாம்.

### மக்காச்சோள சாகுபடிவயல் தின விழா

பதிவு செய்த நாள் : மே 21,2012,04:23 IST

சங்கராபுரம்:சங்கராபுரம் அடுத்த செம்பராம்பட்டு கிராமத்தில் மக்காச்சோள சாகுபடிசம்பந்தமான வயல் தின விழா நடந்தது.சங்கராபுரம் அருகே செம்பராம்பட்டு கிராமத்தில் தான்யா சீட்ஸ், வினாயகாஅக்ரி பண்ணை இணைந்து மக்காச்சோள வயல் தின விழாவை நடத்தியது.
வேளாண்மை அலுவலர் வேலன் தலைமை தாங்கினார். ராம்மோகன் வரவேற்றார். மக்காச்சோள சாகுபடியில் ஏக்கருக்கு 40 மூட்டை மகசூல் பெறுவது பற்றி வேளாண்மை அலுவலர் வேலன் , தான்யா சீட்ஸ் மண்டல மேலாளர் சுப்ரமணி விவசாயிகளுக்கு ஆலோசனைகள் கூறினர்.விழாவில் 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

### உழவர் சந்தைகளில் ரூ. 35.66 லட்சத்துக்கு காய்கறி விற்பனை

பதிவு செய்த நாள் : மே 21,2012,05:05 IST

சேலம்: சேலத்தில் சூரமங்கலம், அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி, தாதகாப்பட்டி உட்பட 11 இடங்களில் உழவர்சந்தைகள் செயல்படுகிறது. இந்த உழவர்சந்தைகளில், வழக்கமான நாட்களில் காய்கறி விற்பனை, 25 லட்சம் முதல் 30 லட்சம் ரூபாய் வரை இருக்கும். இதுவே அமாவாசை உட்பட விஷேச தினங்களில், 45 லட்சம் ரூபாய் வரை நடைபெறும்.
வைகாசி மாத அமாவாசை தினமான நேற்று, சேலம் மாவட்டத்தில் உள்ள, 11 உழவர்சந்தைகளுக்கு, 1,179 விவசாயிகள் மூலம், 35.66 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, 208 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டது. இவற்றை, 45 ஆயிரம் நுகர்வோர் வாங்கிச் சென்றுள்ளனர். மாவட்டத்திலேயே அதிகபட்சமாக சூரமங்கலம் உழவர்சந்தைக்கு, 246 விவசாயிகள் மூலம் கொண்டு வரப்பட்ட, 44 டன் காய்கறிகள் 7.35 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. நேற்று அமாவாசை என்பதால், வாழை இலை, பூ, அகத்தி கீரை, வெள்ளை பூசணிக்காய் ஆகியவற்றின் விற்பனை அமோகமாக நடந்தது. இதனால், விலையிலும் உயர்வு ஏற்பட்டது.

## மஞ்சள் வியாபாரிகள் - விவசாயிகள்ஆலோசனை 23ம் தேதிக்கு ஒத்திவைப்பு

பதிவு செய்த நாள் : மே 21,2012,04:23 IST

ஈரோடு: ஈரோடு ஆர்.டி.ஓ., அலுவலகத்தில் மஞ்சள் வியாபாரிகள் - விவசாயிகள் இடையேயான ஆலோசனைக் கூட்டம் மே, 23ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
மஞ்சள் வியாபாரிகள் - விவசாயிகள் இடையேயான பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க, ஈரோடு ஆர்.டி.ஓ., அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழக விவசாயிகள் சங்கம் பெரியசாமி, காலிங்கராயன் பாசன சபை நிர்வாகி வேலாயுதம், தடப்பள்ளி அரங்கன்கோட்டை வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க நிர்வாகி தளபதி, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.வியாபாரிகள் தரப்பில் எவரும் பங்கேற்கவில்லை. கூட்டத்துக்கு, 20 நாள் கால அவகாசம் வழங்குமாறு கடிதம் மட்டும் சமர்ப்பித்தனர். வியாபாரிகள் யாரும் பங்கேற்காததற்கு ஆர்.டி.ஓ., சுகுமார் கண்டனம் தெரிவித்தார். மே "23ம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும். இதில், வியாபாரிகள் கட்டாயம் பங்கேற்க வேண்டும்' என, உத்தரவிட்டார்.ஏலத்தில் எடைபோடும் போது, சாக்கின் எடையை இரண்டு கிலோ வரை கழிக்க கூடாது. ஏலத்தை காலை 9 மணிக்கே நடத்த வேண்டும். எடை கூலித் தொகையை குறைக்க வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர்கள், அலுவலர்கள் விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தனியார் மண்டிகளில் நடக்கும் ஏலத்தின் போது, சாக்கில் மண்டி பெயரை எழுத கூடாது என, ஆர்.டி.ஓ.,விடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

## நெல் விளைச்சல் போட்டிஏக்கரில் 20 பொதி அறுவடை

பதிவு செய்த நாள் : மே 21,2012,04:23 IST

கொடுமுடி: தமிழக முதல்வரின் சிறப்பு விருது திட்டத்தின் கீழ், திருந்திய நெல் சாகுபடி முறையில், அதிக நெல் உற்பத்தி செய்யும் விவசாயிக்கு ஐந்து லட்சம் ரூபாய் பரிசு வழங்கும் மாநில போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுமுடி, அஞ்சூர் விவசாயி துரைசாமி, வேளாண் துறையின் மூலம், திருந்திய நெல் சாகுபடி செய்திருந்தார்.
வேளாண் துறை கூறிய தொழில் நுட்பங்களை பின்பற்றி, "கோ.ஆர்.ஹெச்.-3' ரக நெல்லை, ஏக்கருக்கு இரண்டு கிலோ விதை விதைத்து, மேட்டு பாத்தி நாற்றங்கால் அமைத்திருந்தார். உரிய

இடைவெளியில் நாற்று நட்டு, கோனாவீடர் கருவி மூலம் களையெடுத்தார்.

வேளாண் துணை இயக்குனர்கள் மாரியப்பன், ராஜேந்திரன், உதவி இயக்குனர் ஜெயவேலு மற்றும் முன்னோடி விவசாயிகள் முன்னிலையில், நேற்று நெல் அறுவடை நடந்தது. ஏக்கருக்கு 5,379 கிலோ நெல் மகசூல் கிடைத்தது. இந்த ஆய்வின் முடிவு, மாநில வேளாண் இயக்குனருக்கு அனுப்பி வைக்கப்படும்.விவசாயி துரைசாமி, இதற்கு முன், மூன்று முறை மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் முதல் பரிசும், மாநில முதல் பரிசும், விவசாய செம்மல் விருதும் பெற்றுள்ளார்.

## உழவர் பெருவிழாக்களில் 20 ஆயிரம் பேருக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : மே 20,2012,00:33 IST

தேனி: மாவட்டத்தில் 99 உழவர் பெருவிழாக்கள் நடத்தப்பட்டு, 20 ஆயிரம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 99 வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு விழாவிலும் 250க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். அனைத்திலும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். இவர்களுக்கு விவசாயத்துறைகளின் சார்பில், அனைத்து தொழில்நுட்ப தகவல்கள், அரசு மானிய திட்டங்களின் விவரம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 23 லட்சம் ரூபாய் மதிப்பிலான சொட்டுநீர் பாசன மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## கால்நடை தீவனங்களை மேம்படுத்த நடவடிக்கை

பதிவு செய்த நாள் : மே 20,2012,23:50 IST

தேனி:மாவட்டத்தில் கால்நடை தீவனங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.அவர் கூறியதாவது: தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் கடந்த ஆண்டு, இறவையில் 180 ஏக்கர் நிலப்பரப்பில் 13.33 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டப்பணி செயல்படுத்தப்பட்டது.

மானாவாரியில் நடப்பு நிதியாண்டில் மாவட்டத்தில் 300 ஏக்கர் பரப்பளவில் 16.20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தீவன சோளம், தீவன மக்காச்சோளம் மற்றும்

காராமணி (தட்டைப்பயிர்) போன்ற தீவன பயிர்கள் வரும் மழைக்காலத்தில் 100 சதவீதம் மானியத்தில் பயிரிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
குறைந்த நீரினை கொண்டு இயங்கும் மழைத்தூவுவான் கருவி குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் 15 பயனாளிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம், பெரிய, இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்தில் 38 பயனாளிகளுக்கு 18 ஆயிரத்து 750 ரூபாய் வீதமும் இக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.இந்த ஆண்டு மாவட்டத்தில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இறவையில் 300 ஏக்கர் பரப்பளவில் அதிக மகசூல் தரக்கூடிய புல் ரகங்களை பயிரிட ரூ.31.08 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,' என தெரிவித்துள்ளார்.

## வாழைகளுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தல்

பதிவு செய்த நாள் : மே 20,2012,23:35 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி:தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சிவசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்டத்தில் கடந்த வாரம் வீசிய சூறாவளிக்கு 3 லட்சம் வாழைகள் ÷சதமடைந்துள்ளன. அரசு ஒரு வாழைக்கு 3 ரூபாய் நஷ்ட ஈடு அறிவித்துள்ளது. இது சேதமடைந்த வாழையை அப்புறப்படுத்தக் கூட போதாது. ஒரு வாழைக்கு உற்பத்தி செலவு 100 ரூபாய் ஆவதால், சேதமடைந்த வாழைக்கு இழப்பீடும் 100 ரூபாய் வழங்க வேண்டும்.மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இலவச மின்சாரத்தை ரத்து செய்து, ஒரு ஹார்ஸ்பவருக்கு ரூ.1,750 மின்கட்டணம் விதித்துள்ளது. தமிழக அரசு இதனை முழு மானியமாக வழங்குவதால் விவசாயிகளுக்கு இந்த உண்மை தெரியவாய்ப்பில்லை. விரைவில் அனைத்து பம்ப் செட்களுக்கும் மீட்டர் வைத்து கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது. இந்நிலையில் தமிழக அரசால் முழு மானியம் வழங்க முடியாது. எனவே மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள மின்கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும்.இலவச மின்சாரம் நீடிக்க வேண்டும், என வலியுறுத்தி அனைத்து மாவட்டங்களிலும் ஜூலை மாதம் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்,என்றார்.

---

## மீதரமற்ற வெங்காய விதையால் ஒரு கோடி ரூபாய் இழப்பு

பதிவு செய்த நேரம்:2012-05-20 12:49:43

தாராபுரம், : தாராபுரம் மற்றும் குண்டடம் பகுதியில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு சின்ன வெங்ககாயம் சாகுபடி செய்யப்பட்டது. சாகுபடிக்கு வெங்காய விதைகள் பயன்படுத்தப்பட்டன. பிரபல கம்பெனி விற்பனை செய்த வெங்காய விதைகளை விவசாயிகள் கிலோ ரூ.2,500 முதல் ரூ. 3 ஆயிரம் வரையில் விலை கொடுத்து வாங்கி பயிர் செய்தனர். நல்ல மகசூல் கிடைக்கம் என்று எதிர்பார்த்து காத்திருந்த நிலையில் 110 பத்து நாட்களாகியும் பயிர் மட்டுமே நன்கு வளர்ந்திருந்தது. வெங்காயம் வளரவில்லை. ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் வரையில் முதலீடு செய்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மேற்சொன்ன பகுதிகளில் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக அளவு சாகுபடி பாதிக்கப்பட்டது. மொத்தத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக் கொண்டனர். மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறிய தோடு, அதிகாரிகள் அடங் கிய குழுவை ஏற்படுத்தி, பாதிக்கப்பட்ட விளை நிலங்களை நேரில் ஆய்வு செய்யவும் உத்தரவிட்டுள்ளார். நிவாரணத்தை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளின் நிலங்களை, இதுவரையில் எந்த அதிகாரிகளும் ஆய்வு செய்யவில்லை. ஏமாந்து போன விவசாயிகள் தற்போது வேறு சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இது குறித்து உழவர் உழைவர் உழைப்பாளர் கட்சியின் மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி கூறியதாவது: இப்பகுதியில் சிறு, குறு விவசாயிகள் வெங்காய சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். அரசு கொள்முதல் செய்யும் விதை நிறுவனத்தை நம்பி அப்பாவி விவசாயிகள் விதைகளை வாங்கி பயிர் செய்தனர். மகசூல் இல்லாமல் போனதால் ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டது. மாவட்ட ஆட்சியரிடம் நிவாரணம் கேட்டோம். விதை விற்பனை செய்த நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண் டும் என புகார் அளித்தோம். அதிகாரிகளை அனுப்புகிறோம் ஆய்வு செய்வார்கள். அறிக்கை பெறப்பட்டதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார். இதுவரையில் எந்த அதிகாரிகளும் வரவில்லை. தரமற்ற விதையை விற்பனை செய்த நிறுவனத்தின் மீதும் நடவடிக்கை இல்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகளின் குறைதீர்ப்பு கூட்டம்

நடத்தப்படுகிறது. அதில் விவசாயிகளின் குறைகள் கேட்கப்படுகிறது. ஆனால் தீர்க்கப்படுவதில்லை. வெறும் கண்துடைப்பு. இவ்வாறு ஈஸ்வரமூர்த்தி கூறினார்.

### வார விலை உயர்வு விவசாயிகள் நிம்மதி

பதிவு செய்த நேரம்:2012-05-20 12:22:32

குன்னூர், : பசுந்தேயிலைக்கான வார விலை உயர்ந்து இருப்பதால் விவசாயிகள் சற்றே நிம்மதி அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் இந்தாண்டு தேயிலை மகசூல் குறைந்துள்ளது. உறைபனி, கடுமையான வெயில் என சீதோஷ்ண நிலை மாற்றம் தான் மகசூல் குறைவுக்கு காரணம் என்று விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர். கடந்தாண்டு இதே கால கட்டத்தில் தேயிலை மகசூல் அதிகரித்தது. அனைத்து ரக பசுந்தேயிலைக்கும் கிலோவுக்கு ரூ.12 முதல் ரூ.15 வரை கிடைத்தது. இந்தாண்டு மகசூல் குறைவால் தேயிலை தூளின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

அரசு மற்றும் தனியார் ஏல மையங்களில் தேயிலை தூளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு வருவதால் விலை அதிகரித்து வருகிறது. மேலும் நூறு சதவீத தூள் விற்கப்படுகிறது. இந்த வார விலையாக சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ரூ.15, நடுத்தரம் ரூ.19, உயர் ரகம் ரூ.24 வரை விலை வழங்கப்பட்டது. கடந்த வாரத்தை விட இது கிலோவுக்கு ரூ.1 முதல் ரூ.2.50 வரை அதிகம். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எனினும் மாத விலையில் ஏற்பட்டுள்ள குளறுபடி இன்று வரை மாறவில்லை. மாத விலை கிலோவுக்கு ரூ.15 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

மாத, வார விலைகளில் ஏற்பட்டுள்ள வித்தியாசம் காரணமாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது தொடர்பாக தேயிலை வாரியம் தொடர்ந்து பல்வேறு ஆய்வுகளை நடத்தி வருகிறது.

கடந்த 14ம் தேதி முதல் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் அதன் கணக்குகள், சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை, தேயிலை ஏல மையங்களில் விற்பனையாகும் தேயிலை தூள் விலை குறித்து விரிவான அறிக்கை தயார் செய்து வருகின்றனர். எனவே விரைவில் இப்பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் என விவசாயிகள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.